விடுபட்ட பிரெஞ்சிந்தியாவில் புது நிர்வாகம்!

REGD. No. M. 6311 PHONE No. 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu": A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F

தனி இதழ்: ஒரு அணா இலங்கையில் 10 சதம்	சென்னை: ஆனி 24உ வியாழன் (8—7—54) வெளியூர்: ஆனி 25உ வெள்ளி (9—7—54)	மலர்: 2 இதழ்: 21

19 நபர்களைக் கொண்ட பிரெஞ்சிந்திய விடுதலை குழு அமைப்பு

பொறுப்பை கவனிக்க முன்னாள் கலெக்டரும், டி.எஸ்.பி.-யும் நியமனம்

பிரெஞ்சு ஏகாதிபத்திய ஆட்சியின் பிடியிலிருந்து, இதுவரை விடுவிக்கப்பட்டுள்ள பிரெஞ்சிந்திய பகுதியில், சிவில்-கிரிமினல் விவகாரங்களைத் திறம்பட நிறைவேற்றுவதற்காக, முன்னாள் கலெக்டர் ஒருவரையும், டி. எஸ். பி. ஒருவரையும், விடுதலைக் குழு நியமனம் செய்திருக்கிறது. நிர்வாகப் பொறுப்பு முழுவதையும், இனி, அவர்களே கவனித்துக்கொள்ளுவர்.

மேற்கூறிய இரு உயர்தர அதிகாரிகளும், 19 நபர்களைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள பிரெஞ்சிந்திய விடுதலைக் குழுவிற்குக் கட்டுப்பட்டு செயலாற்றக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

விடுபட்ட பிரெஞ்சிந்தியப் பகுதிகளில் முழு அரசியல் அதிகாரம் கொண்டிருப்பது, இந்த ஒரே ஒரு அமைப்பே யாகும். இக்குழுவின் முடிவு தான், இறுதியானது.

பிரதம நிர்வாகஸ்தர் பணியைச் செய்து வருவதற்காக, முத்துகுமரப்ப ரெட்டியார் நியமிக்கப்பட்டிருக்கிறார் அவருடைய பொறுப்பான பதவிக்கு தலைமை நிர்வாக உறுப்பினர் எனப் பெயர் தரப்பட்டிருக்கிறது.

இதுவரை விடுபட்ட பிரெஞ்சிந்திய பகுதிகளின் நிர்வாகப் பொறுப்பை, இ. ஜி. பிள்ளை முத்துப்பிள்ளை, முத்துகுமரப்ப ரெட்டியார் ஆகிய மூவர்களும் நேரடியாகக் கண்காணித்து வந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆந்திர சர்க்காருக்கு எதிராக!

ஆகஸ்ட் பதினைந்தில் 'போராட்டம்!'

மதுவிலக்கு சட்டத்தை மீறி கள்ளிறக்கப்படுமாம்!

ஆந்திராவில் மதுவிலக்குச் சட்டம் அமுலில் இருந்து வருகிறது. மதுவிலக்கு எந்த அளவு வெற்றி பெற்றது என்பதை ஆராய்ந்து கூற ஆந்திர சர்க்கார், சர் எஸ். வி. ராமமூர்த்தி தலைமையில் ஒரு ஆய்வுக் குழுவை நியமித்தது.

அக்குழு வெளியிட்ட அறிக்கை முடிவுகளை, அப்படியே நிறைவேற்ற வேண்டுமென்ற திருத்தத் தீர்மானம் ஒன்று, ஆந்திர சர்க்காருக்கு எதிராக, ஆந்திர சட்டசபையில் நிறைவேறியது. ஆந்திர அமைச்சர் குழு, அத்தீர்மானத்தை மதித்து நடக்க முன்வராமல் இருந்து வருகிறது.

கள்ளிறக்கும் தொழிலாளர்கள், கிருஷிக் லோக் கட்சியின் சார்பில், கடந்த ஆறு வாரங்களாக அறப்போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இப்பொழுது கம்யூனிஸ்டு கட்சியின் பராமரிப்பில் இருந்து வருகிற கள்ளிறக்குவோர் சங்கம், ஆகஸ்ட் 15-ந் தேதியிலிருந்து, ஆந்திரம் முழுவதிலும் மதுவிலக்குச் சட்ட விதிகளை மீறி கள்ளிறக்குவது எனத் தீர்மானித்து இருக்கிறது.

ஆகஸ்ட் 15-ந் தேதியிலிருந்து நடைபெற இருக்கிற மேற்படி நேரடி நடவடிக்கைக்காக ஆந்திராவில் ஒவ்வொரு பகுதியிலும் பலமாகப் பிரசாரம் செய்யப்பட்டு வருகிறது.

கிருஷிக் லோக் கட்சியின் கள்ளிறக்கும் நேரடி நடவடிக்கையை கம்யூனிஸ்டு கட்சி ஆதரிக்காமல் கேலியும் கிண்டலும் செய்து வருவதாக அக்கட்சியின் தலைவர் லட்சண்ணா தகவல் கொடுத்திருக்கிறார்.

கம்யூனிஸ்டு கட்சியினருடன் இத்துறையில் கூட்டு நடவடிக்கைக்குத் துளியும் இடம் கிடையாது எனவும் அவர் அறிவித்துள்ளார்.

அவரைப் போலவே கம்யூனிஸ்ட் கட்சி முக்கியஸ்தர்களும், அப்போராட்டத்திற்குத் துளியும் தொடர்பற்ற முறையில்தான் தங்கள் போராட்டம் நடைபெறப் போவதாகத் தெரிவித்துள்ளனர்.

கம்யூனிஸ்டு கட்சியினரின் போராட்ட அறிவிப்பைக் கேள்விப்பட்ட கிருஷிக் லோக் கட்சியும், தாம் நடத்திவரும் போராட்டத்தை வலிவுடையதாக ஆக்க தீவிர முயற்சி எடுத்துக் கொள்வதாகத் தெரிகிறது.

ஒவ்வொரு ஊரிலுமுள்ள நீதிமன்றங்கள் முன்பாகவும், குண்டூரில் புதிதாகத் துவக்கப்பட்டுள்ள உயர்நீதி மன்றத்தின் முன்பாகவும், கிருஷிக் லோக் கட்சி 'மறியல்' செய்யும் யோசனையிருப்பதாகவும் கூறப்படுகிறது.

10,000 கள்ளிறக்கும் தொழிலாளர்களுக்கு வேலை தரக்கூடியதான, பதநீர் இறக்கும் ஏற்பாட்டை ஆந்திர சர்க்கார் அறிவித்துள்ளது.

நிபந்தனை எதுவுமில்லாமல் கள்ளோ பதனீரோ இறக்க உரிமை இருக்க வேண்டுமென லட்சண்ணா சர்க்கார் ஏற்பாடு பற்றி கருத்தறிவித்தார்.

1,569 பேர் சிறையில்!

உத்திர பிரதேசத்தில் உயர்த்தப்பட்ட நீர்ப்பாசன வரியினை எதிர்த்து இதுவரை பிரஜா-சோஷலிஸ்டுகள் 1,569 பேர் சிறை சென்றுள்ளார்கள் என்று லக்னோவிலுள்ள பி.-சோ. கட்சியின் தலைமைக் காரியாலயம் அறிவித்தது.

'பணமுதலை'களுக்கு டில்லி சர்க்கார் பணிகிறது!

தொழில்களை தேசியமயமாக்குவது நிறுத்தப்படும்?

வேலையின்மையைப் போக்குவதாக சமாதானம்

ஆமதாபாத், ஜூலை 7—

தொழில்களைத் தேசிய மயமாக்கும் திட்டத்தை நிறுத்தி வைக்குமாறும், மேற்கொண்டு எதும் செய்ய வேண்டாமென்றும் இந்திய சர்க்கார் முடிவு செய்துவிட்டதாம்.

இந்த முடிவை நிறைவேற்றும்படி எல்லா ராஜ்யங்களுக்கும் இந்திய சர்க்கார் சுற்றறிக்கை அனுப்பியிருக்கிறதாம்.

தொழில்களை தேசிய உடைமையாக்கும் பிரச்சினை குறித்து திட்டக் கமிஷன் சிறிது காலமாக ஆழ்ந்து பரிசீலனை செய்து வந்தது என்றும், தேசிய உடைமையாக்கியதால் சிலவகை தொழில்களில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்து வருவதாக காணப்பட்டதாம்.

வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க இப்போதைய தொழில்களைத் தேசிய மயமாக்குவதை நிறுத்துவதென்று சர்க்கார் முடிவு செய்திருக்கிறதாம்.

இதன் மூலம் தனிப்பட்ட முதலீட்டு அம்சங்களுக்குத் தொழில் துறையின் அதிக ஊக்கம் பிறக்குமென்று கருதப்படுகிறது.

தொழிற் சங்கப் போட்டி!

ஒரு தொழிலாளியின் உயிரைக் குடித்தது!

கோவை ஆலையில் சம்பவம்

கோவை, ஜூலை 7—

சிங்காநல்லூர் கோத்தாரி ஆலைத் தொழிலாளருக்கான இரண்டு போட்டிச் சங்கங்களிடையே ஏற்பட்ட மோதலின் விளைவாக ஒரு தொழிலாளி உயிரிழந்தார். பலர் மிகாயப்படுத்தப்பட்டனர் என்று தெரிகிறது.

காயமடைந்தவர்கள் மருத்துவ மனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் இருவர் நிலை மோசமாயிருக்கிறதாம்.

ஆலைக்கு முன்னால் ஆயுதம் தாங்கிய போலீசார் இப்பொழுது நிறுத்தப்பட்டுள்ளனர். இன்று ஆலையில் வேலை நடைபெறவில்லை. போலீசார் புலன் விசாரித்து வருகின்றனர்.

மக்கள் பணம் தராததால் திட்டம் நிறைவேறவில்லை

சமுதாய நலத் திட்டம் பற்றி நெல்லை கலெக்டர்

திருநெல்வேலி, ஜூலை 7—

கிராம மக்களிடமிருந்து கிடைக்கவேண்டிய 50 சதவிகித செலவுத் தொகை வசூலாகாத காரணத்தால் திருநெல்வேலி மாவட்டத்தில் சமுதாய நலத் திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம் ஏற்பட்டிருக்கிறதாம்.

இத்தகவலை திருநெல்வேலி மாவட்ட சமுதாய நல திட்டக் குழுவின் கூட்டமொன்றில் பேசுகையில் குழுவின் தலைவரும் திருநெல்வேலி கலெக்டருமான என். எம். பாலகிருஷ்ண பிள்ளை கூறியிருக்கிறார்.

இன்னல் நீங்க வேங்கைக்கு மாமிச தானம்!

மாஜிஸ்திரேட்டின் மடமைக்கு ரூ. 10 அபராதம்!

மூட நம்பிக்கையின் வன்மையே வன்மை!

கற்பனை தெய்வங்களைத் திருப்திபடுத்த, பார்ப்பனர்களுக்கு தானம் தரவேண்டுமென்கிறது ஆரிய வேதம்!

பக்தர்கள்: சிருஷ்டித்தக் கடவுள்களின் சீற்றத்தை ஆற்றி சந்தோஷத்தை மூட்ட, சாந்தி செய்ய வேண்டுமெனச் சாற்றுகிறது, ஆரியரின் வேதம்!

மக்கள் பதவி உயர்வு பெற,

(4-ம் பக்கம் பார்க்க)

நிலம் வாங்குவதற்கு வெளிநாட்டவருக்குத் தடை

தேயிலை வியாபாரத்திலும் இலங்கையருக்கே அனுமதி

இலங்கை சர்க்கார் யோசனை

கொழும்பு, ஜூலை 7—

இலங்கையில் அன்னியர்கள் நிலம் வாங்குவதைத் தடை செய்யும் சட்டம் கொண்டு வரலாம் என்று நில உரிமை சம்பந்தமான பார்லிமெண்டரி ஆலோசனைக் கமிட்டி சர்க்காருக்கு சிபார்சு செய்திருக்கிறது.

அரசியல் பொருளாதார தற்காப்புக் காரணங்களை உத்தேசித்தே இம்முடிவு செய்யப்பட்டதென ஆலோசனைக் கமிட்டியின் தலைவர் டிசில்வா கூறினார்.

சர்க்காரிலுள்ள பார்லிமெண்டு உறுப்பினர்கள் கூட்டத்தில் கண்டி உறுப்பினர் இலங்கைப் பிரஜைகளுக்கு மட்டுமே நிலம் வாங்க உரிமை இருக்கவேண்டுமென பிரேரேபனை கொண்டு வந்தார்.

இதேபோல் தேயிலை வர்த்தகமும் இலங்கையர் வசமே இருக்க வேண்டுமென்று சர்க்கார் ஆலோசனை செய்கிறதாம்!

அன்னியர்கள் இலங்கையில் ஏராளமாக நிலம் வாங்க அனுமதித்தால் அதன் மூலம் அரசியல் பொருளாதாரத் துறையில் பாதகம் ஏற்படுமென்றும், இது இலங்கை சர்க்காரின் இலங்கையர் மயமாக்கும் கொள்கைக்கு விரோதமாகும் என்றும், விமான நிலையங்கள், இராணுவ ஸ்தானங்களுக்குப் பக்கத்தில் நிலம் வைத்துக்கொள்ள அன்னியர்களை அனுமதிப்பது தற்காப்பிற்கு உகந்ததல்ல என்றும் கருதுகின்றனர்.

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 8—7—54 வியாழன்

திரு.-கொச்சி பிடிவாதம்!

திருவாங்கூர் கொச்சியில் பாய்ந்தோடுகிற பெரியாற்று நீரிலிருந்து சிறிது தண்ணீரை, 5,900 அடி பூமிக்குள்ளாகக் கொண்டுவந்து, வைகை ஆற்றில் விட்டு, மதுரை மாவட்டத்தில் உள்ள சிறு பகுதி நஞ்சை நிலங்களின் பாசனத்திற்குப் பயன் படுத்தப்பட்டு வருகிறது. ஏகரா ஒன்றுக்கு ரூ 5 வீதம் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 40,000 பெரியாற்றிலிருந்து பயன்படுத்தப்படும் நீருக்காக வரியும் கொடுத்து வருகிறது சென்னை சர்க்கார், திரு-கொச்சி சர்க்காருக்கு. மேற்குறிப்பிட்ட நிபந்தனை கொண்ட ஒப்பந்தம் ஒன்றும் இரு சர்க்காருக்கிடையிலும் 1886-ம் ஆண்டில் கையெழுத்தாகி நடைமுறையில் இருந்தும் வருகிறது.

அவ்வொப்பந்தத்தில், பெரியாற்றிலிருந்து கொண்டு வரப்படும் தண்ணீரை, பாசனத்திற்கு மட்டுந்தான் பயன்படுத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனையும் இருக்கிறது.

பெரியாற்றிலிருந்து மதுரை பாசனத்திற்காகக் கொண்டு வரப்படும் தண்ணீரை, மின்சார உற்பத்திக்காகவும் பயன்படுத்தி, மதுரை மாவட்டத்திலும், அதை அடுத்துள்ள இராமநாதபுர மாவட்டத்திலும் நிலத்திருக்கும் மின்சார பஞ்சத்தைப் போக்க வேண்டுமென்பது, சென்னை சர்க்காரின் நீண்ட காலத்திய விருப்பமாக இருந்து வருகிறது, 1886-ம் ஆண்டு ஒப்பந்தத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள தண்ணீரின் அளவுக்குள்ளாகத்தான், சென்னை சர்க்கார் விரும்பும் மின்சார உற்பத்தியும் அடங்கி இருக்கிறது மின்சார உற்பத்தி ஏற்பாட்டிற்காக என, உடன்படிக்கையில் குறிப்பிட்டுள்ளதற்குக் கூடுதலாக, பெரியாற்று நீர் தமக்குத் தேவைப்படுகிறது எனக் கூறவில்லை, சென்னை சர்க்கார்.

ஏற்கனவே செய்துக் கொள்ளப்பட்ட உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அளவு தண்ணீரைக் கொண்டே, மின்சார உற்பத்திக்கு ஏற்பாடு செய்ய சென்னை சர்க்கார் கொள்ளும் விருப்பம், திரு. கொச்சி சர்க்காரை எந்த வகையிலும் பாதிக்காது. அதுவுமன்றி. அம்மின்சார உற்பத்தி ஏற்பாட்டினால். திரு. கொச்சி சர்க்காருக்குக் காதொடிந்த ஊசியளவும், பொருள் நஷ்டம் ஏற்படுவதற்கும் இடம் கிடையாது

ஆனால், அவ்வேற்பாட்டினால், சென்னை சர்க்காரின் ஆட்சிக்குட்பட்டுள்ள, இரண்டொரு மாவட்டங்களின் நீண்டகாலத் தேவையாக உள்ள, மின்சாரத் தேவை நிறைவேறி, அப்பகுதிகளின் தொழில் வளமும், செல்வம் பெருக்கமும் ஏற்படுவதற்கு ஒரு வாய்ப்பு கிடைக்கக்கூடும். இந்த முன்னேற்றம், எந்த வகையிலும் திரு.-கொச்சியின் முன்னேற்றத்திற்குக் குந்தகமாக இருக்கப் போவதில்லை.

சென்னை சர்க்காரின் இம் மின்சார உற்பத்தி கோரிக்கையை, திரு.-கொச்சி சர்க்கார், பெரியாற்றிலிருந்து சென்னை சர்க்காருக்குக் கொடுக்கப்படும் தண்ணீர், பாசனத்திற்காக மட்டுந்தான் கொடுக்கப்படுகிறதேயல்லாது வேறு வகையில் பயன்படுத்திக் கொள்வதற்கு அல்ல என விளக்கமுரைத்து, தமக்குச் சாதகமாக அதுபற்றியுள்ள 1886-ம் ஆண்டு உடன்படிக்கையைச் சான்று காட்டுகிறது.

இப்பிரச்சினை பற்றி திரு.-கொச்சிக்கும்— சென்னைக்கும் ஏற்பட்ட பிணக்கில் முடிவு காண்பதற்காக, மத்திய சர்க்காரின் துணைநாடப் பெற்றது 1941-ம் ஆண்டில். அன்றிருந்த பிரிட்டிஷ் சர்க்கார், திரு.-கொச்சியின் எதிர்ப்பை ஒப்புக் கொண்டு, சென்னையின் முயற்சிக்குத் தடை விதித்துவிட்டது.

மீண்டும் இப்பிரச்சினை பற்றிய பேச்சுவார்த்தை திரு.-கொச்சிக்கும் சென்னைக்கும் 1952-ல் துவங்கிற்று அன்று முதல் திரு.-கொச்சி சர்க்கார், மின்சார உற்பத்திக்காக ஒதுக்கப்பட்டுவரும் பெரியாற்று நீரைப் பயன்படுத்துவதாக இருந்தால், அவ்வாறு உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்திற்கு, 'உரிமைப் பணம்' தமக்குத் தர வேண்டுமென வலியுறுத்தத் தொடங்கிற்று.

ஒவ்வொரு ஆண்டிலும் ஒன்பது மாதத்திற்கு 140,000 கிலோவாட் மின்சாரமும், மீதமுள்ள மூன்று மாதத்திற்கு 35,000 கிலோவாட் மின்சாரமும் உற்பத்தி செய்வதாக இருக்கிறது சென்னை சர்க்கார். ஏற்கனவே திரு. கொச்சி ஆட்சிப் பொறுப்பில் இருந்த காங்கிரஸ் சர்க்கார் கிலோவாட் ஒன்றுக்கு 6-ரூபாய் 'உரிமை கட்டண'த்திற்கு ஒப்பி வந்தது. அங்கு ஏற்பட்ட மந்திரி சபை மாற்றத்தினால், அந்தப் பேச்சு வார்த்தை தொடர்ந்து நடைபெறவில்லை.

மீண்டும் சென்ற திங்கள் இறுதியில் இரு சர்க்கார் பிரதிநிதிகளுக்கும் இடையில் பேச்சு வார்த்தை நடைபெற்று, பிரச்னையில் முடிவு காணப்படாமல், முடிவுற்றது

இப்போது நடைபெற்ற பேச்சு வார்த்தையில், கிலோவாட் ஒன்றுக்கு ரூபாய் 10 வீதம் தருவதற்கும் சென்னை சர்க்கார் முன்வந்ததாக மராமத்து மந்திரி ராமநாதபுரம் ராஜா குறிப்பிடுகிறார்,

ஒரு கிலோவாட்டிற்கு ரூ 6 உரிமைக் கட்டணமாகக் கொள்ளப்பட்டால், சென்னை சர்க்கார் ரூ. 2 லட்சத்தை உரிமைக் கட்டணமாக திரு.-கொச்சிக்குக் கொடுக்க வேண்டியதாக இருக்கும். ரூ. 10 வீதம் கொடுக்கப்படுவதானால், ரூ 3 லட்சம் திரு.-கொச்சிக்குக் கொடுக்கப்பட வேண்டி இருக்கும்.

ஒரு கிலோ வாட்டிற்கு ரூ. 6 வீதம் உரிமைக் கட்டணம் கொடுத்த பிறகும், புதிய மின்சார உற்பத்தி ஏற்பாட்டினால், சென்னை சர்க்காருக்கு 2½ லட்ச ரூபாய் வருமானம் கிடைக்குமெனவும், ரூ, 10 வீதம் தரப்படுவதானால், 1 லட்ச ரூபாய்தான் வருமானமாகக் கிடைக்கக் கூடுமெனவும், குத்து மதிப்பாகக் குறிப்பிட்டுள்ளார் மராமத்து மந்திரி.

புதிய மின்சார உற்பத்தி அமைப்புக்கு ரூ. 10½ கோடி செலவாகுமெனவும், திட்டம் 5 ஆண்டுகளில் பூர்த்தியாகுமெனவும், அறிவித்துள்ளார்.

திரு.—கொச்சி சர்க்கார், சென்னை சர்க்காருடன் கூட்டாக குறிப்பிட்ட மின்சார உற்பத்தி ஏற்பாட்டை நிறைவேற்றி நடத்தலாம் எனவும், தனது விருப்பத்தை அறிவித்தது. அதை சென்னை சர்க்கார், உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் தனக்கே போதாததாக இருக்கிறது எனவும், கூட்டாகப் பணியாற்றுவது என்பது நடைமுறைக்கு ஒத்துவராதது எனவும், காரணம் காட்டி சென்னை சர்க்கார், திரு.-கொச்சி கோரிக்கையை, மறுத்துவிட்டது.

பெரியாற்று நீர் பற்றி 1886-ம் ஆண்டு உடன்படிக்கை ஏற்பட்ட காலத்தில் இங்கிருந்த அரசியல் நிலையுடன், இன்றுள்ள அரசியல் நிலையை ஒப்பிட்டுப் பார்த்தோமானால். திரு. கொச்சியின் கோரிக்கை எவ்வளவு விபரீதமானதாக இருக்கிறது என்பதை ஒருவாறு புரிந்து கொள்ளலாம்.

உடன்படிக்கை ஏற்பட்ட காலத்தில் திருவாங்கூர் ஒரு சுதேச சமஸ்தானமாக இருந்திருக்கிறது. அந்த அரசரும், பிரிட்டிஷ் முடிக்கு நேரடியாகக் கட்டுப்பட்டவராக இருந்திருக்கிறார்.

சென்னை மாகாணமும் பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இருந்தபோதிலும், திருவாங்கூர் அரசருக்கு பிரிட்டிஷார் காட்டிய சலுகை அளவு, மாகாணங்களுக்குக் காட்டியதில்லை.

வெள்ளையர் வெளியேறி, புதிய அரசியல் சட்டம் உருவான பின்னர், ஒரு மாநிலத்திற்கும் மற்றொரு மாநிலத்திற்கும் இருக்க வேண்டிய அரசியல் உறவு முறையில் கணிசமான மாற்றம் ஏற்பட்டு இருக்கிறது. அந்த அளவிற்கு, ஆட்சிப் பொறுப்பில் உள்ளவர்களுடைய நோக்கிலும் போக்கிலும், கணிசமான மாற்றம் ஏற்பட்டிருக்க வேண்டும்.

பழைய ஒப்பந்தத்தைக் காட்டி, தமக்கு எந்த வகையிலும் நஷ்டத்தை உண்டாக்காத வேறு ஒரு மாநில சர்க்கார் மேற்கொள்ள இருக்கும் திட்டத்தைத் தடுத்து வருவதும், திட்டம் நிறைவேற லட்சக்கணக்கான பணத்தை உரிமைக் கட்டணமாகக் கேட்பதும், எவ்வளவு அக்கிரமமானதாக இல்லையா என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும்.

திரு,—கொச்சியின் கோரிக்கை கொஞ்சமும் நியாயமற்றது பொருளற்றது என்ற முடிவிற்குத்தான், ஒவ்வொருவரும் வருவர் என்பதில் ஒரு துளியும் ஐயமில்லை.

ஆஸ்திரேலிய குடியேற்றக் கொள்கை

இந்தியர்களைக் குறிப்பிட்ட அளவில் அனுமதிக்கக் கோரிக்கை!

பேச்சு வார்த்தைகளில் முன்னேற்றம்

கான்பெர்ரா, ஜூலை 7— ஆண்டுதோறும் ஒரு குறிப்பிட்ட அளவு இந்தியர்களை ஆஸ்திரேலியாவில் குடியேற அனுமதிக்குமாறு இந்திய சர்க்கார் ஆஸ்திரேலிய சர்க்காரைக் கேட்டுக் கொள்ளுமென்று தெரிகிறது.

ஆஸ்திரேலியாவின் ராஜ்யங்களின் அதிபர்கள் சிலருடனும், சர்க்கார் அதிகாரிகள், தனிப்பட்டவர்கள் சிலருடனும், ஆஸ்திரேலியாவில் இந்தியத் தூதுவராக உள்ள ஜெனரல் கரியப்பா ஏற்கெனவே கலந்து பேசியிருக்கிறார் என்று தெரிகிறது.

50-லிருந்து 100 இந்திய விவசாயிகள் வரையில் அனுமதிக்குமாறு இந்தியா கேட்குமென்றும், நல்லெண்ணத்தின் அறிகுறியாக ஆஸ்திரேலிய சர்க்கார் அந்த விவசாயிகளை ஏற்றுக் கொள்ளுமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இது நடைபெற்றால், தென் கிழக்காசிய நாடுகளில் ஆஸ்திரேலியாவின்மீது பாராட்டத் தக்க அளவில் நல்லெண்ணம் ஏற்பட்டிருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இப்போது ஆஸ்திரேலியாவில் இந்தியர்களும் சிங்களவர்களுமாக 8,162 பேர் இருக்கின்றனர். இவர்கள் அனைவரும் ஒரு குறிப்பிட்ட காலம் வரையில் வசிக்க அனுமதி பெற்றுள்ள மாணவர்களே!

இந்தியாவின் அரசியலில், ஆஸ்திரேலியாவின் இனவேற்றுமைக் கொள்கை பெரும் மாற்றம் ஏற்படுத்துகிறதென்றும், ஆஸ்திரேலியாவில் 'வெள்ளைக் கொள்கையை' இந்திய கம்யூனிஸ்டுகள் பயன்படுத்திக்கொண்டு காமன்வெல்த்துக்கு எதிராகப் பிரசாரம் செய்கின்றனர் என்றும் கான்பெர்ராவில் உள்ள இந்திய அதிகாரிகள் கூறுகின்றனர்.

சமீபத்தில், இந்திய இராஜதந்திரிகள், உயர்தர அரசியல்வாதிகளுடன் நேரு கலந்து பேசியது ஆஸ்திரேலியாவில் இனவாரிக் கொள்கை பற்றியே என்று நம்பப்படுகிறது.

வெள்ளை ஆஸ்திரேலியா பற்றி ஜெனரல் கரியப்பா சற்றுக் கடுமையாகப் பேசியதும், "காமன்வெல்த்திலிருந்து 44-கோடி இந்திய, பாகிஸ்தான் மக்களை கம்யூனிஸ்டுகள் இழுப்பிடம் நோக்கி ஆஸ்திரேலியா தாக்குகிறது" என்றும் பேசியதும் ஆஸ்திரேலியாவில் சிறிது பரபரப்பை உண்டாக்கியிருக்கிறதாம்!

180 போலீசார் வேலையிலிருந்து நீக்கப்பட்டனர்!

உத்திர பிரதேச அரசாங்கத்தின் லஞ்ச ஊழல் ஒழிப்பு நடவடிக்கை!

லஞ்ச ஊழல் பழக்கங்களைக் கைக்கொண்டிருந்ததாயும் ஒழுங்கற்ற முறையில் நடந்துகொண்டதாயும், குற்றம் சுமத்தி, இலாக்கா மூலமாயும் மற்றும் நீதி மன்றங்களின் மூலமாகவும், உத்தர பிரதேச சர்க்கார் போலீசார் மீது மேற்கொண்ட நடவடிக்கைகளின் விளைவாக 179 போலீசார் வேலையிலிருந்து நீக்கப்பட்டனர் எனத் தெரிகிறது.

சுமார் 650 பேர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இன்னும் 10 பேர்களும் தண்டிக்கப்பட்டனர். மேலும் 247 வழக்குகள் நீதி மன்ற விசாரணையில் இருந்து வருகின்றனவாம்.

இந்த நடவடிக்கைகள் எல்லாம் கடந்த மார்ச் 20-ந் தேதி முடிகிற மூன்று மாதத்தில் மேற்கொள்ளப்பட்டவை என அறிவிக்கப்படுகிறது.

வேலை இழந்த 179 பேரில் 3 சப்—இன்ஸ்பெக்டர்களும் 9 ஹெட்கான்ஸ்டபிள்களும் உள்ளனர்.

லக்னோ பல்கலைக் கழகத்தில் அளவுக்கு அதிகமான மாணவர்கள்!

புதிய மாணவர்களுக்கு கடுமையான கட்டுப்பாடுகள்

இந்த ஆண்டிலும் கிளர்ச்சி ஏற்படுமா?

லக்னோ, ஜூலை 7— இந்த ஆண்டில் லக்னோ பல்கலைக் கழகத்தில் மாணவர்கள், ஆசிரியர்களிடையே நல்லுறவு நிலவுமென்று எதிர்பார்க்கின்றனர்.

புதிதாக சேர்க்கப்படும் மாணவர்களுக்கு கடுமையான விதிமுறைகள் இருக்கின்றன. சென்ற ஆண்டில் 1,400 பேர் சேர்க்கப்பட்ட இண்டர் வகுப்பில் இப்போது 800 பேர்களே சேர்க்கப்படுவார்கள் என்று தெரிகிறது.

இந்த ஆண்டில் ஏராளமான மாணவர்கள் தேர்தலில் தோல்வியுற்றிருக்கின்றனர் என்று தெரிகிறது. சென்ற ஆண்டில் இந்தப் பல்கலைக் கழகத்தில் மாணவர்—ஆசிரியர்களிடையே நிலவிய எதிர்ப்பேதான் இதற்குக் காரணம் என்றும் தெரிகிறது.

குறைந்த அளவில் மாணவர்களைச் சேர்ப்பது என்ற பல்கலைக் கழகத்தின் முடிவை மாணவர்கள் அமைப்பு எதிர்க்கிறதாம். பல்கலைக் கழகத்தின் இப்போக்கை எதிர்த்து மாணவர்கள் கிளர்ச்சி நடத்தப் போவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறதாம்!

இந்திய சர்க்கார் அரசியல் சட்டத்திற்கு கொண்டுவந்திருக்கும் திருத்த மசோதாவை நிறைவேற்றுவதில் தாமதம் செய்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சித்தூர் மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக மாநாடுகள்!

வங்க மொழியிடம் பீகார் சீற்றம்

—— (:) ——

இந்தி மொழியிடம் — வங்கத்தின் வெறுப்பு!

இரண்டு காங்கிரஸ் சர்க்காரிடை பிணக்கும் — பிளவும்!

பீகார் அரசாங்கத்தில் மான்பூம் மாவட்டத்தில் வங்காள மொழி நசுக்கப்படுவதாக மேற்கு வங்கம் குற்றம் சாட்டிற்று!

மேற்கு வங்கத்தின், பள்ளிகளிலும், மற்ற இடங்களிலும் இந்தி விலக்கப்பட்டு, வங்காள மொழி திருட்டுத்தனமாக நுழைக்கப்படுவதாக அங்குள்ள இந்தி மொழி பேசும் மக்கள் குறைப்பட்டு அரசாங்கத்திற்கு எழுதியுள்ளதாக, பதிலுக்கு குற்றம் சுமத்திற்று பீகார் அரசாங்கம் மேற்கு வங்கத்தின் மீது!

இத்தனையும் அகில இந்திய காங்கிரஸ் காரியக் கமிட்டியின் சென்ற கூட்டத்தில்தான் நடைபெற்றுள்ளன!

இத்தகு 'லடாய்'கள் நடைபெறும் கமிட்டிக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய பண்டிதர், இரு மாநில மந்திரிகளுக்கும் தாக்கீது அனுப்பி, இருவரையும் சந்தித்துப் பேசுமாறு கட்டளையிட்டார்—இந்தப் பிரச்னைக்கு முடிவு காண.

கட்டளை பெற்ற 'கனம்'கள் இருவரும் பாட்னாவில் இன்று சந்தித்திருக்கின்றனர். இந்த மொழிச் சண்டை பற்றிப் பேச, மேற்கு வங்க முதலமைச்சர், பி. சி. ராய் பீகார் முதலமைச்சருடன் டாக்டர் ஸ்ரீகிருஷ்ண சின்ஹாவுடன் பேசி முடித்ததும், வங்காள மொழியை பாதுகாப்பதற்காக பீகார் அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் திருப்திகரமானதாக இருக்கின்றன என்று கூறினார். மேலும், தனது பங்கிற்கு, மேற்கு வங்கத்தில் ஹிந்தியும், இந்தி பேசும் மக்களின் நியாயமான எல்லாக் குறைகளுக்கும் சரியான பரிகாரம் செய்வதாக உறுதியளிப்பதாயும் கூறினார்.

உறவு கிடையாதாம்!

இருப்புத் திரை நாடுகளுடன் எவ்வித உறவும் வைத்துக் கொள்வதில்லை என்று குவாடிமாலாவின் புதிய சர்க்கார் முடிவு செய்திருக்கிறது.

திமுக பொதுச்செயலாளர் அண்ணாதுரை சுற்றுப்பயணம்

10, 11—7—54: போதட்டூர்ப் பேட்டை மாநாடுகள்
15—7—54: ஈரோடு(திருமணம்)
16—7—54: சென்னிமலை தி. மு. க. பொதுக் கூட்டம்
17—7—54: ஆரணி
18—7—54: காஞ்சிபுரம்
25—7—54: சென்னை,மைலாப்பூர் தி. மு. க. கிளை பொதுக் கூட்டம்

குறிப்பு: சென்னிமலை, ஆரணி உறுதி செய்யப்படவில்லை.

சமுதாய நலத் திட்டம்— மே. வ. ஆட்சி அலட்சியம்!

திட்ட ஆலோசனை குழுவினரும் கிராம சேவா சங்கத்தினரும் தூங்குகின்றனர்!

மத்திய உதவி நிதி அமைச்சர் முகாரி!

கல்கத்தா, ஜூலை 7—

"சமுதாய நலத் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக மத்திய அரசாங்கம் உதவிய பணத்தை, மேற்கு வங்க அரசாங்கம் முழுவதுமாக உபயோகித்துக் கொள்ளவில்லை."

"கல்கத்தாவிற்கருகில் உள்ள சமுதாய நலத் திட்டப் பிரதேசத்தின் ஒரு பிரிவின் திட்ட ஆலோசனை 'போர்டு' கூட்டத்திற்கு அழைக்கப்பட்டிருந்தேன். 'போர்டு' துவக்கப்பட்டு இரண்டு ஆண்டுகளாகியும், அதுதான் முதல் கூட்டம் என்று அறிந்தேன். இது, அந்த திட்ட ஆலோசனை 'போர்டார்' எவ்வளவு அலட்சியமாக இருக்கிறார்கள் என்பதை எடுத்துக் காட்டுகிறது"

—இவ்வாறு மத்திய அரசாங்க உதவி நிதி மந்திரி எ. சி. குஹா குற்றம் சாட்டினார்.

மார்வாரி மாணவர்கள் சங்கத்தில் பேசுகையில் அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"கிராம சேவா சங்கங்கள் திட்ட ஆலோசனை போர்டு ஆகியவற்றின் அலட்சிய மனப்பான்மையினால், இந்திய தேசிய முன்னேற்றத் திட்டங்களின் வளர்ச்சி தடைபடுகிறது.

"ஆலோசனை போர்டுகள் அமைப்பது சிலாக்கியமானதுதான்; ஆனால், போர்டில் உள்ள தனிப்பட்ட அங்கத்தினர்கள் வேலை செய்வதில்லை. அவர்கள், போர்டு கூட்டத்தில் கலந்து கொள்வதோடு தங்களின் வேலை முடிந்துவிட்டதாக நினைக்கிறார்கள். "இந்த திட்ட ஆலோசனை போர்டுகள் எல்லாம் கிராம மக்களிடையே, கிராமத்தின் நிலைகள் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் எனும் எண்ணத்தை உருவாக்குவதற்காக நிறுவப்படுகின்றன.

"திட்டக் கமிஷனும் கிராம மக்களும் ஒரு குறிப்பிட்ட திட்டத்தின் செலவுகளைப் பகிர்ந்து கொள்கிறார்கள். இதிலே கூட பல மாநிலங்கள் அதிக பயன் பெறுவதற்காக சிரத்தை எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை.

மேற்கு வங்கத்தைப் பொறுத்த மட்டில் மத்திய அரசு 17·5 லட்சம் ரூபாய்கள் உதவியது. பின்னும் ரூ. 17·5 லட்சம் உதவியதுடன் மேலும், 10 லட்சம் உதவியது; ஆகமொத்தம் 45 லட்சம் உதவப்பட்டது. ஆனால் இந்த கடைமுறை ஆண்டில் ரூ. 8 லட்சம் மட்டுமே செலவு செய்யப்பட்டுள்ளது. இது எந்த ஒரு மாநில சர்க்காருக்கும் ஒரு நல்ல 'ரிகார்டு' அல்ல.

"இந்தப் பழியை, மத்திய அரசின் மீதோ மாநில அரசின் மீதோ சுமத்த முடியாது. கிராம சேவா சங்கங்களையும் திட்ட ஆலோசனை போர்டுகளையும் தான் இந்தப் பழி சாரும். தங்கள் தங்கள் பிரதேசங்களில் அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்ற அவை தவறிவிட்டன.

"சர்க்காரின் உதவியை பூரணமாக உபயோகித்துக் கொள்ள கைத்தறி நெசவாளர்களும் தவறிவிட்டனர். மில் துணிகளுக்கு 'செஸ்' விதித்து அந்தப் பணத்தை, கூட்டுறவு சங்கங்கள் மூலமாக நெசவாளருக்குத் தர ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த உதவி பூரணமாகப் பெற்றுக் கொள்ளப்படவில்லை.

'பருவக்கால விவசாயத்திற்காக கடன் உதவுதல்' எனும் 'ரிசர்வ் பாங்கின் திட்டமும் வெற்றிகரமானதாக இல்லை, உயர்ந்த விகித வட்டிக்கு, விவசாயிகள் தொடர்ந்து, லேவாதேவிக்காரர்களிடமே கடன் வாங்கி வருகின்றனர்.

'ரிசர்வ் பாங்கி,' கடன்களை கூட்டுறவு சங்கங்களின் மூலமாகக் கொடுப்பது என்றிருக்கிறது; அவை சரியாக நிர்வகிக்கப்படாததே இதற்குக் காரணம் என நினைக்கின்றேன்."

கரூர் பள்ளியில் பிற்பட்ட மாணவர்களுக்கு இடமில்லை!

கல்வி அதிகாரிக்கு மனு

கரூர், ஜூலை 5—

கரூரில் உள்ள பாசுபதேஸ்வர முனிசிபல் உயர்நிலை பள்ளியில் முதல் படிவத்தில் மாணவர்களைச் சேர்ப்பதற்கென்று பரீட்சை ஒன்று வைக்கப்பட்டதென்றும், பின்னர் பள்ளித் தலைமையாசிரியர், கல்வியில் பிற்பட்ட பல இனத்துப் பிள்ளைகளுக்கும் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த பிள்ளைகளுக்கும் பெரும்பான்மையோருக்கு இடமில்லை என்று அறிவித்தார் என்றும் தெரிகிறது.

தலைமை ஆசிரியரின் போக்கு சரியல்ல வென்றும், பரீட்சையின் மூலம் மாணவர்களின் திறமையைச் சோதிப்பதைவிட, ரிக்கார்டு சீட்டைப்பார்த்து மாணவர்களைச் சேர்த்திருக்க வேண்டுமென்றும், அரசியல் சட்டத்தின் உரிமைகளுக்குப் புறம்பாக தலைமை ஆசிரியர் நடந்து கொண்டிருக்கிறார், என்றும் கரூர் தோழர் வி. நாகராஜ ராவ் திருச்சி மாவட்ட கல்வி அதிகாரிக்கு மனு ஒன்று அனுப்பியிருக்கிறார்.

விழாவில் விபத்துக்கள்!

மூன்று நாட்கள் நடைபெற்ற அமெரிக்க சுதந்திர தின 178-வது ஆண்டு விழா நிகழ்ச்சிகளின் போது ஏற்பட்ட விபத்துக்களால் அமெரிக்காவில் 225 பேர் மாண்டனர் என்று தெரிகிறது. விழா நிகழ்ச்சிகளின்போது 145 போக்குவரத்து விபத்துகள் ஏற்பட்டனவாம்!

அஞ்ச வேண்டாம்!

அமைதியாக இருக்குமாறும் ரஷ்யாவின் படையெடுப்பு பற்றி பயமேதும் வேண்டாமென்றும் மக்களைக் கேட்டுக் கொள்ளும் வேண்டுகோளை அச்சடித்து, பிரெஞ்சு, விமானம் அதிகாரிகள் ஹனோய் நகரம்முழுமையும் ஒட்டியிருக்கிறார்கள்.

கிரீஸ், துருக்கி, யூகோஸ்லோவேகியா நாடுகள் அனைத்தும் பால்கன் ஒப்பந்தத்திற்காக நகல் ஒன்றைத் தயார் செய்துவிட்டன.

பர்மாவில் சுதந்திரப் பிரதேசம் அமைக்க கம்யூனிஸ்டுகள் முயற்சி

பர்மா துருப்புகள் தீவிரம்

பர்மிய கம்யூனிஸ்டு கலகக்காரர்கள் பூனா மாகாணத்தில் சுதந்திரப் பிரதேச மொன்றை உருவாக்க முயற்சிக்கின்றனர் என்று தெரிகிறது.

பர்மிய துருப்புகள் கலகக்காரர்களை எதிர்த்து தாக்குவதில் நல்ல வெற்றி கண்டனர் என்று பர்மா இராணுவ காரியாலயச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜூன் 30ம் தேதியன்று கரேன் பிரிகேடைச் சேர்ந்த 150 பேருடன் அப்படையின் தலைவரும் பர்மா சர்க்காரிடம் சரணடைந்தனர் என்று தெரிகிறது.

வடக்கே மாங்காக் என்னும் எல்லைப்போர நகரம் ஒன்று கோமின்டாங் துருப்புகளின் பிடியில் இருப்பதாகத் தெரிகிறது.

நாகை தி. மு. க. தோழர்களுக்கு

நாகையில், தோழர் விஜயரங்கன் அவர்களைச் செயலாளராகக் கொண்டு, திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம் பணியாற்றி வருகிறது. அதற்கு தலைமை நிலையத்தின் ஒப்புதலும் இருந்துவருகிறது. தற்சமயம் வேறு சிலர், அதே பெயரில், முறையற்ற போக்கில் செயலாற்ற முனைந்திருப்பதாகக் கேள்விப்படுகிறோம். அப்போக்கு மிக மிகத் தவறுடையது என்பதைத் தொடர்புடைய தோழர்களுக்கு அறிவித்துக் கொள்ளுகிறோம். (ஆர்.)

கருவேலன்கடை கம்யூனிஸ்டின் சீற்றம்!

23—6—54ந் தேதி கருவேலன் கடை என்ற ஊரில் கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த ஒருவர் மதுபோதையில் தி. மு. கழகத் தோழர் சம்பந்தம் டீ கடையில் கலவரம் செய்து, கடைக்கு டீ குடிக்கவரும் ஆதிதிராவிடர்களையும், மற்ற இதர தோழர்களையும், "சம்பந்தம் டீ கடைக்குப் போகக் கூடாது; மீறி சென்றால், உதைப்பேன்; கட்சியிலிருந்து விலக்குவேன்," என்று மிரட்டியும், சில தோழர்களை பயமுறுத்தியும், பல தொந்தரவுகளும் செய்திருக்கிறார். தி. மு. கழகத்தைப் பற்றி வாயில் வந்தவாறு பேசியும் வருகிறார். (ச. நி)

புத்த மார்க்கத்தை தழுவிய முதல் இந்து!

1202 ஆண்டுக்குப் பின் நடைபெற்ற நிகழ்ச்சி!

புத்தகயாவில், உள்ள புத்தர் ஆலயத்தில், சென்ற புதன் கிழமை, இதுவரை இந்துவாக இருந்த ஒருவன் தான் வெட்டி, புத்த மார்க்கத்தைத் தழுவினார். 1202 ஆண்டுக்குப் பிறகு, முதல் முதலாக, புத்த மார்க்கத்தைத் தழுவிய முதல் இந்து இவரேயாவார். 2500 ஆண்டுகளுக்கு முன்பு புத்தர் அறிவொளி பெற்ற இடமான புத்தகயாவில், புத்த மார்க்கத்தைப் பின்பற்றுகிற, உள்ளூர்வாசியாக ஒருவரும், இதுவரை இருந்தது கிடையாது!

அவன் உயிருடன்தான் உலவுகிறான்!

ஆனால் சட்டம்,அவன் சமாதியில் இருப்பதாகச் சொல்கிறது!

வாஷிங்டன், ஜூலை 6—

தாமஸ் சி. புன்டின் என்பவர் 1932-ம் ஆண்டு காணாமல் மறைந்து போய்விட்டான். ஏழாண்டுகட்கு முன் அவன் செத்துவிட்டதாக சட்டரீதியாக முடிவு செய்யப்பட்டது.

அவன் செத்துவிட்டான் என்பதால் அவன் செய்திருந்த 'இன்ஷ்யூரன்ஸ்' 30 ஆயிரம் டாலர் ஒரு கம்பெனியால் தரப்பட்டதாம்.

ஆனால் 22 ஆண்டுகளாக மறைந்திருந்த அவன் தனது இரண்டாவது மனைவியுடன் தோன்றினான். அதன் மேல், அவன் உயிருடனிருப்பதால், 'செத்துவிட்டதாகச் சொல்லி'ப் பெறப்பட்ட 30 ஆயிரம் டாலரையும் திரும்பப் பெறுத்தர வேண்டுமெனக் கோரி அந்த இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி வழக்குத் தொடர்ந்தது.

ஆனால் வழக்கை விசாரித்த நீதிபதி, அவன் 'சட்டப்படி இறந்தவன்தான்' என்றும், கட்டுப்பாட்டுச் சட்டங்கள் புன்டின் விஷயத்தில் காலாவதியாகிவிட்டன என்றும் கூறி வழக்கைத் தள்ளுபடி செய்தார்.

பிரிட்டிஷ் அமெரிக்க இராஜதந்திரிகள் அடுத்த சில நாட்களில் தென் கிழக்காசியப் பிரச்சினைகள் பற்றிக் கூடிப் பேசுவார்கள் என்று தெரிகிறது.

சைக்கிள் காணவில்லை

ராலே மாடல் புது வித 22" கருப்பு பெயின்ட்—டைனமோ, செயின் கவருடன்-வண்டி என். எம். சி. 53/31716, வாட்கை செ. 8. வண்டியின் பிரதான பாகங்களில் செல்வம் என்று வெட்டப்பட்டிருக்கும்.

சுமார் 20 வயதுடைய மதுபுருவத்தின் கீழ் தழும்புள்ள முத்தையா என்னும் தோழர் 9—6—54-ல் வாடகைக்கு எடுத்துப் போனார்—காணவில்லை, விபரம் தெரிவிப்போருக்கு தகுந்த பரிசளிக்கப்படும்.

செல்வம் & கம்பெனி, புதுக்கோட்டை.

வாரீர்! போதட்டூர்ப்பேட்டை அழைக்கிறது! ஜூலை 10—11!

உலக அரங்கில்

வாஷிங்டன் :
சீனாவை ஐ. நா. சபையில் சேர்ப்பதைத்தான் முழுமனதுடனும் உறுதியாகவும் எதிர்ப்பதாக ஐசன்ஹோவர் நிருபர்களிடையே கூறினார்.

லண்டன் :
விஜயலட்சுமி பண்டிட் தனது சுற்றுப் பிரயாண திட்டத்தில் மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது. லண்டனிலிருந்து அவர் நேரே நியூயார்க் செல்லாமல், புதுடில்லி செல்வார் என்று தெரிகிறது.

• • •

பிரிட்டிஷ் விலக்கித் தொழிலாளர்கள் தொழிற் கட்சி தர்மகர்த்தா பதவிக்கு நடைபெறும் தேர்தலில் பெவானை ஆதரிப்பது இல்லை என்று முடிவு செய்திருக்கின்றனர்.

லிஸ்பன் :
போர்ச்சுகீசிய சர்க்காருக்கு விரோதமாக நடந்துகொண்டதாக குற்றம் சாட்டப்பட்டுள்ள கோவா டாக்டர் நீதி மன்றத்தில் தனக்காக வாதாட தயாராக இல்லை என்று மறுத்துவிட்டார். டாக்டர் கைதாண்டே என்னும் பெயருடைய இவரை கோவா சர்க்கார் பிப்ரவரியில் நாடு கடத்தியது.

நியூரம்பர்க் :
மேற்கு ஜெர்மனியைச் சேர்ந்த 7 அமெரிக்கர்களை செக் நாட்டுப் போலீசார் பிடித்து வைத்துக் கொண்டனர். ஜெர்மானியரிடம் உள்ள மூன்று செக் அருப்புகளை விடுவித்தால் இந்த 7 அமெரிக்கர்களையும் விடுவிப்பதாக செக் போலீசார் கூறுகின்றனர்.

வெல்லிங்டன் :
"சீனாவை ஐ. நா. சபையில் சேர்க்கும் நேரம் வந்துவிட்டது," என்று நியூசிலாந்து வெளிநாட்டமைச்சர் கூறினார். இதன் மூலம் உலக நெருக்கடியைத் தீர்க்க முடியும் என்று அவர் கூறுகிறார்.

கெய்ரோ :
சர்க்கார் விமானமொன்றில் சிலவகை மருந்துகளைக் கடத்திச் செல்ல முயன்ற ஒருவனை விமானத்தில் செல்லும்படி செய்து, பின்னர் பலவந்தமாக விமானத்தை இறக்கி அந்த கள்ளக் கடத்தல் செய்யும் வியாபாரியை கைது செய்தார்கள். இதற்காக விமானத்தில் எகிப்து போலீசார் ஒருவர் மெக்கானிக் வேஷத்தில் விமானத்தில் சென்றார்களாம்.

உகாந்தா :
சிவில் சர்வீசில் உள்ள எல்லா இனத்தவருக்கும், ஆண் - பெண் வேறுபாடு இன்றி ஒரே அளவில் சம்பளம் தரவேண்டுமென்று சர்க்காரால் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழு ஒன்றின் அறிக்கை கூறுகிறது.

லண்டன் :
மாவ் மாவ் இயக்கத்தினரான ஜான் கென்யாட்டா, மற்றும் நால்வர் மீது கென்யா நீதி மன்றம் விதித்த ஏழாண்டு கடுங்காவல் தண்டனையை எதிர்த்து பிரிவிகவுன்சிலில் செய்யப்பட்ட அப்பீல் தள்ளுபடி செய்யப்பட்டது.

நியூயார்க் :
ஐ. நா. சபை கூட்டத்தில் ரஷ்யா, பசிபிக்கில் நீர்வலிக் குண்டைப் பரிசோதனை செய்வதை ஆட்சேபிக்கும் என்று தெரிகிறது.

கெய்ரோ :
ஜாபருல்லாகான் உலக நீதிமன்ற நீதிபதிகளில் ஒருவராகத் தேர்ந்தெடுப்பதில் பாகிஸ்தானை ஆதரிக்க வேண்டுமென்று பாகிஸ்தான் சர்க்கார் எகிப்து சர்க்காரைக் கேட்டிருக்கிறது.

கொழும்பு :
இலங்கை அரசியல் சட்டத் திருத்த மசோதா செனட் சபையில் நிறைவேறியது என்று தெரிகிறது.

ஹனோய் :
நகர மக்களிடையே தற்காப்பு படைகளை நிறுவ ஹனோய் நகர மேயர் ஏற்பாடுகள் செய்துவருகிறார் என்று தெரிகிறது.

ஹாங்காங் :
கரயமடைந்துள்ள 200 பிரெஞ்சுத் துருப்புகளை வியட்மின் சர்க்கார் பிரெஞ்சுக்காரர்களிடம் ஒப்படைப்பதாக அறிவித்திருக்கிறது.

கோபன்ஹேகன் :
இரண்டு போலந்து மாலுமிகள் டென்மார்க்கில் தஞ்சம் புக டென்மார்க் சர்க்காரிடம் அனுமதி கேட்டிருக்கின்றனர். அவர்கள் பெயரை வெளியிட டென்மார்க் மறுத்துவிட்டது.

கேப்டவுன் :
தென்னாப்பிரிக்காவில் இந்த ஆண்டில் 1,20,00,000 அவுன்ஸ் தங்கம் கிடைத்ததாம். இந்த வகை டிரான்ஸ்வால், ஆரெஞ்சு பிரிவ்டேட்களின் சங்க இலாகா அறிவித்தது.

பிரெஞ்சு அரசாங்கத்தின் 'திடீர் திருட்டுவேலை'

புதுச்சேரி, ஜூலை 6—
பிரெஞ்சுப் பிடியில் உள்ள திராவிடப் பகுதிகளிலிருக்கும் பொது நூல் நிலையங்களிலுள்ள சரித்திர முக்கியத்துவம் பெற்ற 'ரிகார்டுகள்,' காலா காலத்திய சரித்திரக் குறிப்புகள் முதலியவற்றை பிரெஞ்சு அரசாங்கத்தார் சுருட்டிக் கொண்டுள்ளனர்.

பிரெஞ்சு அதிகாரிகளின் கட்டளைப்படி இந்தக் 'கொள்ளை' நடைபெறுவதாகத் தெரிகிறது.

இந்த தொன்மை வாய்ந்த 'ரிகார்டுகளை' இரகசியமாக எடுத்துச் செல்ல தனி வெள்ளைக்கார அதிகாரிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளனராம்.

பிரெஞ்சுக்காரர்கள் புதுச்சேரியிலிருந்து வெளியேறும் நிலைமை வந்தால் அப்போது இவைகளை பிரான்சிற்கு எடுத்துச் சென்று விடுவதற்காகத்தான் இப்போது திடீரென்று இந்தத் 'திருட்டு வேலை'யில் ஈடுபட்டுள்ளனராம் பிரெஞ்சு அதிகாரிகள்.

சென்னை மாநில தமிழாசிரியர் மாநாடு

அண்ணாமலை நகரில் ஜூலை 10, 11ல் நடைபெறும்

சென்னை மாநில தமிழாசிரியர் மாநாடு அண்ணாமலைப் பல்கலைக் கழகம் மண்டமளிப்பு விழா மண்டபத்தில் ஜூலை 10, 11 சனி, ஞாயிறு நாட்களில் நாவலர் திரு. சோமசுந்தர பாரதியார் எம். ஏ., பி. எல், தலைமையில் நடைபெறும்.

மாநாட்டைக் கல்வியமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் திறந்து வைப்பார்.

காரைக் கல்லூரித் தலைவரும் சட்ட சபை திராவிடக் கட்சித் தலைவருமான திரு. சுயம்பிரகாசம் எம். எல். ஏ., தமிழ்க் கொடி ஏற்றுவிப்பார்.

இயற்கை எய்திய செட்டி நாட்டரசர் அண்ணாமலையார், திரு. வி. க., பேராசிரியர் சுந்தரனார், மறைமலையடிகள், ஞானியார், சுவாமி வேதாசலம் ஆகியோர் படங்களை முறையே தோழர்கள் லெ. ப. கரு. இராமநாதர், டாக்டர் மு. வ., ஔவை சு. துரைசாமி, ஞா. தேவநேயப் பாவாணர், இராசாக்கண்ணு, டாக்டர் மா. இராசமாணிக்கம் ஆகியோர் முறையே திறந்துவைப்பார்கள்.

மயிலை சிவமுத்து, க. அன்பழகன், ரா. பி. சேதுப்பிள்ளை, அன்புகணபதி, எல். என். அருணகிரிநாதர், வரணி தாசன் மற்றும் பலர் சொற்பெருக்காற்றுவார்கள்.

தென்னார்க்காடு மாவட்டக் கலெக்டர் திரு வி. உத்தமராமன் ஐ. சி. எஸ். தலைமையில் திருக்குறள் உரைவளம் பாராட்டு நடைபெறும்.

இசையரசு எம். எம். தண்டபாணி தேசிகரின் இன்னிசை விருந்தும் நடைபெறும்.

மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவராக டாக்டர் அ. சிதம்பரநாதனாரும், செயலாளராக புலவர் த. முருகேசனாரும் இருந்து சிறப்புறப் பணியாற்றி வருகிறார்கள். (ந. நி)

சேலம் தி.மு.க. மாநாட்டு வரவேற்புக் குழு மாவட்ட பிரதிநிதிகட்கு

"10—7—54 சனிக்கிழமை மாலை 3 மணிக்கு, ஆத்தூரில், மாநாட்டு வரவேற்புக் குழு, மாவட்டப் பிரதிநிதிகள் கூட்டம் நடைபெறும்.

பொருள்: மாநாட்டு வரவு-செலவு கணக்கு, குழுவின் அங்கீகாரத்திற்கு வைக்கப்படும்.

குறிப்பு: 8—7—54-ம் தேதியிலிருந்து 10—7—54 காலை 11 மணி வரை மாநாட்டு வரவு-செலவு கணக்குகள் குழுவினர்கள் பார்வைக்கு சேலம் மத்திய பாங்க் சத்திரத்தில் வைக்கப்பட்டிருக்கும்" என செயலாளர் பி. ராமலிங்கம் அறிவிக்கிறார்.

இன்னல் நீங்க.....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிணி நீங்க, நோயற்ற வாழ்வு வாழ, பெருநிதி சேர நவக்கிரகங்களுக்கு, தீயமேற்றி, காணிக்கைச் செலுத்தி, மந்திரம் சபித்து, தண்டனிடச் சொல்லுகிறது, சதிகாரர்கள் எழுதிவைத்த சாத்திர ஏடுகள்!

பாமரர், இவைகளை நம்பி, ஏமாற்றம் பெற்று, இடர்படுவதில் ஆச்சரியமில்லை. அவர்கள் அறிவு நிலை, அத்தகைய மூடச் செயல்களை மேற்கொள்ளத் தூண்டுகிறது! மன்னிக்கலாம்; அவர்கள் அறிவு பெற, ஆகும் நெறி பற்றி விளக்கம் தந்து, அவர்கள் மடமையை விரட்டியடிக்கலாம்!

ஆனால்! ஆனால்!!

படித்தவர், அதுவும் ஆங்கிலங்கற்றவர், அதிலும் மாஜிஸ்திரேட்டாக உயர் பதவியில் இருப்பவர், மடைமைப் பிடியில சிக்கித் திடம்பது என்றால், வேதனை கலந்த அதிர்ச்சியல்லவா உண்டாகிறது? படித்தவர், என்று பகுத்தறிவு பெறுவது, கண்மூடி வழக்கமெல்லாம் மண் மூடிப்போவதெக்காலம் என்ற ஏக்கமல்லவா, நமது இதயங்களை ஆயிரம் கண்களாகத் துளைத்து வருகின்றது?

அலிபூரிலே ஒரு போலீஸ் மாஜிஸ்திரேட் உள்ளார்; அவர் பெயர் நாகேந்திரநாத் சென் முகர்ஜி.

அலிபூர் மிருகக் காட்சிச் சாலையில் உள்ள ஒரு வேங்கைப் புலிக்கு, ஆட்டு இறைச்சியை ஊட்டுவித்தார். அச் செயல் சட்ட விரோதமானதென, அவர் மீது வழக்குத் தொடரப்பட்டது.

அவர் சார்பில், வாதாடிய வழக்கறிஞர், நாகேந்திரசென் னுக்குக் கொடூரமான காலமென்றும், அக்கேடு நீங்க வேண்டுமானால், வேங்கைப் புலிக்கு மாமிச தானம் செய்ய வேண்டுமென அவர் கனவு கண்டதாகவும், அதன் பலனாகத்தான், அவர் வேங்கைக்கு மாமிசம் உண்ணக் கொடுத்தாரெனவும், மன்றத்தில் எடுத்தியம்பினார்!

இவ்வாதத்தை ஒப்புக்கொள்ள மறுத்து வழக்கை விசாரித்த மாஜிஸ்திரேட், மாஜிஸ்திரேட் நாகேந்திரருக்கு ரூபாய் 10 அபராதம் விதித்தார்!

மடமையே! நீ மாஜிஸ்திரேட்டையும் விட்டாயில்லையே!

சித்தூர் மாவட்ட தி. மு. க. மாநாடுகள்

10, 11—7—54-ந் தேதிகளில் பொதட்டூர்பேட்டையில்

லால்குடி நடராசன் பந்தல்—பொட்டி சிராமுலு அரங்கில் நடைபெறும்

10—7—54 சனிக்கிழமை :

சமூக சீர்திருத்த மாநாடு

தலைவர்: அ. பொன்னம்பலனார்

திறப்பாளர்: கே. ஆர். ராமசாமி

11—7—54 ஞாயிற்றுக்கிழமை ;

அரசியல் மாநாடு

தலைவர்: ஏ. எல். சி. கிருஷ்ணசாமி

திறப்பாளர்: இராம. அரங்கண்ணல்

இரு நாட்களிலும் தி. மு. கழகப் பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்களும் இயக்க முன்னணி வீரர்களும் கலந்துகொள்வர்

★

எம். ஜி. ராமச்சந்திரன் குழுவினர் நடிக்கும் 'இன்பக் கனவு'

எஸ். எஸ். ராஜேந்திரன் குழுவினர் நடிக்கும் 'சந்திரமோகன்'

நாடகங்கள் நடைபெறும்

தோழியர்கள் ஜி. கஸ்தூரி, கே. ஆர். சுந்தராம்பாள், தோழர் முருகேசன் குழுவினரின் இன்னிசை நடைபெறும்.

★

இரு நாட்களுக்கும் கட்டணம் (நாடகங்கள் உட்பட): ரூ. 5, 3, 1-8-0 ; பெண்களுக்கு அணா 8

குறிப்பு:—பொதட்டூர்பேட்டைக்குச் செல்ல சோளிங்கபுரம், அரக்கோணம், திருத்தணி, சித்தூர், நகரியிலிருந்து பஸ், ரயில் வசதியுண்டு.

செய்திக்கதிர்

ரயில் பெட்டிகள்
வெளிநாடுகளில் ஆர்டர் கொடுக்கப்பட்டிருந்த ரயில் பெட்டிகளில் 200 பெட்டிகள் சென்னை மீடர் கேஜ் பகுதிக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது.

கைது
ஆட்சேபகரமான துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டதாக டாக்கா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த இரண்டு மாணவர்கள் கைது செய்யப்பட்டனர்.

மறியல்
கல்கத்தா அருகே அகதிகள் ரயில்பாதையில் உட்கார்ந்து 9½ மணி நேரம் மறியல் செய்தனர். மறியல் செய்த 200 அகதிகள் போலீசார் கண்ணீர் புகைப் பிரயோகம் செய்த பின்னரே கலைந்து சென்றனர்.

கண்டனம்
டாக்டர் லோகியா கைது செய்யப்பட்டதைக் கண்டிக்கும் தீர்மானம் ஒன்று பூனா நகரசபையில் கொண்டுவரப்பட்டது. ஆனால் தீர்மானம் நிறைவேறவில்லை.

உதவி
பம்பாய் ராஜ்யத்தில் கூட்டுறவு முறையில் ஆரம்பிக்கப்படும் சர்க்கரை ஆலைகளுக்கு மத்திய சர்க்கார் 120 லட்சம் டன் கடன்தர முன்வந்துள்ளது.

ஏற்றுமதி
மிளகாய் ஏற்றுமதியை அனுமதிக்க மத்திய சர்க்கார் முடிவு செய்துள்ளனர்.

வெளியேற்றம்
பிரெஞ்சுகிர்காகம் சேர்ந்தோர் பலர் அதிகாரிகள் ... இயக்கத்தில் சேர்ந்துவிட்டனர் என்று தெரிகிறது.

கல்வி
சென்னை ராஜ்யத்தில் ஆரம்பக் கல்வியைப் பற்றிப் பரிசீலிக்க சென்னை சர்க்கார் குழு ஒன்றை நியமிப்பார்கள் என்று தெரிகிறது.

பங்கீடு
இதர ராஜ்யங்களின் கொள்கையை ஒட்டி திருவாங்கூர்—கொச்சியிலும் உணவுப் பொருள்கள் மீதுள்ள கட்டுப்பாடுகளும், பங்கீடும் ரத்தாகுமென்று சர்க்கார் அறிக்கை கூறுகிறது.

இராயப்பேட்டை ... கழகத் துக்காக தோழர் இரா. செழியன், எம். ஏ. அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.